பணியில் ஈடுபட்டனர். மீட்பு குழுவினர் தீவிரமாக தேடியும் ஒரு பயணி கூட உயிருடன் மீட்கப்படவில்லை. 23 சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

லெபனான் போக்குவரத்து துறை அமைச்சர் காஜி அரிடி கூறுகையில், இதில், தீவிரவாதிகளின் சதிச்செயல் எதுவும் இல்லை. இடியுடன் மழை பெய்ததால் இந்த விபத்து நடந் திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது தொடர்பாக உயர்நிலை விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். இதேவேளை, இந்த விமான விபத்தைத் தொடர்ந்து தேசிய துக்க தினமாக அனுசரிக்குமாறு அந்நாட்டு பிரதமர் சாத் ஹரிரி அறிவித்துள்ளார்.

*சவுதி அரேபியா*

## அவுஸ்திரேலியா கொல்ல முயலும் ஒட்டகங்களை வாங்க முடிவு

அவுஸ்திரேலியா அரசாங்கம் தனது நாட்டின் வடபகுதியில் உள்ள ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட ஒட்டகங்களை கொல் வதற்கு முடிவு செய்துள்ளது. உலங்குவானூர்தியில் இருந்து துப்பாக்கியால் சுட்டு இந்த ஒட்டகங்களை கொல்ல அந்த நாட்டு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்தத் தகவலை அறிந்த சவுதி அரேபியா, ஒட்டகங்களை கொல்ல வேண்டாம் எனவும், அவற்றை விரும்பும் தங்களிடம் அவற்றை ஒப்படை யுங்கள் என்று அவுஸ்திரேலிய அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளது.



இது தொடர்பாக சவுதி அரேபியா இணையதளம் மூல மாக அது தன் நாட்டு மக்களுக்கு ஒரு வேண்டுகோளும் விடுத்துள்ளது. ஒட்டகங்களை விரும்பும் அரேபியர்கள், ஒன்று சேர்ந்து அவற்றை சவுதி அரேபியாவுக்கு கொண்டு வருவ தற்கான வழிவகைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட் டுக்கொண்டுள்ளது. அரேபியர்களின் அடையாளமாக ஒட்டகங் கள் திகழ்கின்றன. ஒட்டகங்கள் உணவாக, பாலாக, போக்கு வரத்து வாகனமாக, நண்பனாக, போர் இயந்திரமாக அரே பியர்களுக்கு பயன்படுவதாக தெரிவித்துள்ளனர்.

*டென்மார்க்*

## பிரான்சின் வழியைப் பின்பற்ற முடிவு

முஸ்லிம் பெண்கள் தலைமுதல் கால்வரை முகம் தெரி யாத அளவுக்கு பொது இடங்களில் பர்தா அணிந்து செல் வதற்கு தடை விதிப்பதற்கு பிரான்ஸ் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இப்போது டென்மார்க் பிரதமர் லார்ஸ் லோயேக்கே ராஸ்மசென் இந்த வழியில் டென்மார்க்கிலும் தடை செய்வது குறித்து விவாதித்து வருகின்றார்.

முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தாவுக்கு டென்மார்க் சமூகத்தில் இடம் இல்லை என்று அவர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது, நாங்கள் எதிர்த்து வரும் கொள்கைக்கு அடையாளமாக பர்தா இருக்கிறது. டென்மார்க் சமூகம் வெளிப்படையான ஜனநாயக சமுதாயம் ஆகும். இங்கு யாருடன் பேசுகிறோமோ, அவரை நேருக்கு நேர் பார்த்து பேசுவது தான் வழக்கம். அதனால் தான் இந்த உடையை நாங்கள் எதிர்க்கிறோம். எனவே இந்த உடையை தடை செய்வது குறித்து ஆலோசித்து வருகிறோம். இந்த நாட்டு அரசியல் சட்டத்தை மீறாமல் எப்படி இந்த தடையை அனுமதிக்கலாம் என்பது குறித்தும் ஆலோசித்து வருகிறோம். என்று டென்மார்க் பிரதமர் கூறினார்.

பிரான்சில் முஸ்லிம் பெண்கள் முகத்தை மறைக்கும் அளவுக்கு பர்தா அணியக்கூடாது என்பதில் அதிபர் நிக் கொலா சார்கோசி உறுதியாக இருக்கிறார். பர்தா அணிவதை தடுக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வருவதற்கான மசோதா நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்படிருக்கின்றது. இந்த சட்டத்தில், பர்தா அணிபவர்களுக்கு குடியுரிமை கிடைக்காது என்ற அம்சம் சேர்க்கப்பட வேண்டும் என்று அதிபரின் கட்சி வலியுறுத்தி வருகின்றது. இதுதொடர்பாக

*மெக்சிகோ*

## சிறைக் கலவரத்தில் 23 கைதிகள் பலி

மெக்சிகோ நாட்டில் உள்ள டுராங்கோ நகர சிறையில் இரண்டாயிரம் கைதிகள் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் போதை மருந்து கும்பலைச் சேர்ந்த பலரும் இருந்தனர். இவர்கள் தனித்தனி குழுக்களாக செயல்பட்டு வந்தனர். அவர்களுக்குள் அடிக்கடி மோதல்கள் நிகழ்வதும், உயிரிழப் புகள் ஏற்படுவதும் வழக்கம். இந்நிலையில் கடந்த வாரம் இரு தரப்புக்கு இடையே கடும் மோதல் இடம்பெற்றுள்ளது. இதன்போது சிறைக்குள் கிடைத்த பொருட்களை எடுத்து ஒருவரை ஒருவர் பயங்கரமாகத் தாக்கிக் கொண்டனர். இதில் 23 கைதிகள் கொல்லப்பட்டனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சிறைக் காவலர்களும், காவல்துறையினரும்



கலவரத்தை கட்டுக்குள் கொண்டு வந்தனர். காயமடைந்த வர்களில் பலர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

அதே ஊரில் உள்ள மற்றொரு சிறையில் கடந்த ஒகஸ்ட் மாதம் ஏற்பட்ட கலவரத்தில் 19 கைதிகள் கொல்லப்பட்டனர். மெக்சிகோ நாட்டில் போதை மருந்து கும்பல்களுக்கிடையில் அடிக்கடி மோதல்கள் ஏற்படுவதுண்டு. இவ்வாறான மோதல் மற்றும் அவர்களால் நடத்தப்படும் தாக்குதல்களில் மட்டும் 2006ம் ஆண்டுக்கு பிறகு இதுவரை 17 ஆயிரம் பேர் கொல் லப்பட்டுள்ளனர். மெக்சிகோவில் போதை மருந்து தொழில் பாரிய அளவில் நடப்பதால் அதை ஒடுக்குவதற்கு மட்டுமே 40 ஆயிரம் காவல்துறையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர். இதேவேளை, சிறையில் கலவரங்கள் அதிகரித்து வருவதால் சில சிறைகளின் பாதுகாப்பு இராணுவம் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. உலகின் அதிக கைதிகளைக் கொண்ட பத்து நாடுகளில் ஒன்றாக (பார்க்க அட்டவணை) மெக்சிக்கோ உள்ளது. மெக்சிக்கோவின் பல்வேறு சிறைகளிலும் சுமார் 2 இலட்சம் கைதிகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### உலகின் கைதிகள் அதிக எண்ணிக்கை கொண்ட முதல் 10 நாடுகள்

01. அமெரிக்கா 2,085,620
02. சீனா 1,548,498
03. ரஷ்யா 763,054
04. பிரேசில் 330,642
05. இந்தியா 313,635
06. உக்ரேன் 198,386
07. மெக்சிக்கோ 191,890
08. தென் ஆபிரிக்கா 186,739
09. தாய்லாந்து 168,264
10. ஈரான் 133,658

கட்சியின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், பர்தா அணிந் தால் அவர்கள் பேருந்தில் பயணம் செய்ய முடியாது. அவர்களுக்கு குடியுரிமை கொடுக்கக்கூடாது. கொடுத்து இருந்திருந்தால் அதனை இரத்து செய்யவேண்டும் என்பன போன்ற அம்சங்கள் இந்த சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

*அமெரிக்கா*

## ஒபாமா அரசின் 2வது ஆண்டு திட்டங்கள் அறிவிப்பு

அமெரிக்க அதிபராக பதவி ஏற்ற பராக் ஒபாமா 2வது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறார். 2வது ஆண்டுக் கான திட்டங்களை ஒபாமா அரசு அறிவித்துள்ளது. அது பற்றி



வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் மைக் ஹேம்மர் கூறியதாவது, 2வது ஆண்டில் இந்தியா, சீனா, பிரேசில், தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளுடன் உறவை மேலும் பலப்படுத்தி, ஒத்துழைப்பை அதிகரிக்க ஒபாமா திட்டமிட் டுள்ளார். அமெரிக்க தேசிய பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்த முடிவு செய்து இருக்கிறார். பாதுகாப்பு உச்சி மாநாடு ஏப்ரல் 11, 12 திகதிகளில் நடைபெறும். அணு தீவிர வாதத்தை ஒழிக்க அணு ஆயுத பரவலை தடுப்பதில் ஒபாமா தீவிரமாக ஈடுபடுவார். வெளிநாட்டு பயணங்களை மேற் கொள்வார். அவரது பயண திட்டங்கள் இன்னும் முடிவு செய் யப்படவில்லை. அதேபோல வெளிநாட்டு தலைவர்கள் அமெ ரிக்கா வருவதை வரவேற்பார் என்று ஹேம்மர் கூறினார்.

இதேவேளை, பல்வேறு காரணங்களால் மக்கள் நம் மீது கோபமாக உள்ளனர் என, அமெரிக்க அதிபர் ஒபாமா தெரி வித்துள்ளார். அமெரிக்கா மாசாசூசெட்ஸ் பகுதியின் செனட் உறுப்பினராக இருந்தவர் முன்னாள் அதிபர் கென்னடியின் சகோதரர் எட்வர்டு கென்னடி. இவர், அதிபர் ஒபாமாவின் ஆளுங்கட்சியான ஜனநாயக கட்சியைச் சேர்ந்தவர். கடந்த 50 ஆண்டுகளாக அதிக செல்வாக்கு பெற்ற இவர், கடந்த ஆண்டு இறந்ததை அடுத்து, இதற்கான இடைத்தேர்தல் சமீபத்தில் நடந்தது. இதில், எதிர்க்கட்சியான குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்ட ஸ்கொட் பிரவுன், 52 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இது குறித்த ஒபாமா குறிப்பிடு கையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக காணப்பட்ட பொரு ளாதார நிலை, பன்றிக் காய்ச்சல் உள்ளிட்ட காரணங்களால் அரசின் மீது மக்கள் கோபமாக உள்ளனர். இந்த செனட் தேர்தல் மூலம் குடியரசு கட்சிக்கு அதிக வாக்குகள் கிடைத் துள்ளன. இதை வைத்து அவர்கள் சுகாதார காப்புறுதித் திட்டத்துக்கு முட்டுக்கட்டை போட்டு விடாதபடி நமது கட்சித் தலைவர்கள் செயல்பட வேண்டும், என்றார்.

*யேமன்*

## ஐரோப்பிய நாடுகளில் தற்கொலைத் தாக்குதல் நடத்த அல்—ஹைடாவின் புதிய திட்டவடிவம்

ஐரோப்பிய நாடுகளில் தற்கொலை தாக்குதல் நடத்துவதற்காக பெண்களுக்கு யேமன் நாட்டில் அல்-ஹைடா பயிற்சி அளித்து வருவதாக அதிர்ச்சிகர தகவலை அமெரிக்க உளவு நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. அல்-ஹைடா மற்றும் தலிபான் தீவிரவாதிகள் இதுவரை தற்கொலை தாக்குதல் நடத்துவதற்கு ஆண்களையே பெருமளவில் பயன்படுத்தி வந்தனர். இனி அவர்கள் பெண்களையும் பயன்படுத்த திட்ட மிட்டுள்ளனர். இதற்காக அரபு நாட்டினர் போல தோற்றம் இல்லாத பெண்களை தேர்ந்தெடுத்துள்ளனர். அவர்களுக்கு யேமன் நாட்டில் தற்கொலை தாக்குதல் நடத்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு, ஐரோப்பிய கடவுச் சீட்டுக்களில் பயணம் செய்து ஐரோப்பிய நாடுகளின் விமான நிலையங்கள் மற்றும் முக்கிய இடங்களில் தாக்குதல் நடத்த இருக்கிறார்கள் என்று அமெரிக்க உளவு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. அரபு இளைஞர்களுக்கும், அரபுத் தோற்றம் கொண்ட பெண்களுக்குமே கடும் சோதனைகள் மேற்கொள் ளப்படுவதால் அரபு அல்லாத பெண்களைத் தேர்ந்தெடுத்து இவ்வாறான தாக்குதல் நடவடிக்கையை முன்னெடுக்க முனைந்திருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அல்-ஹைடா ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரித்தா னியாவையே குறிவைத்து இருக்கிறார்கள். அவர்கள் அந்நாட்

(28ம் பக்கம் பார்க்க)